


தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் ஒரு குடுமிப் பிடிக் காட்சி அரங்கேறுகிறது. யார் வந்து தீர்த்து வைக்கிறார்கள்?

கர்நாடகத்திலிருந்து யாராவது ஒருத்தர். இல்லாவிட்டால், உத்தரப்பிரதேசம் அல்லது குஜராத் அல்லது மகாராஷ்டிரத்திலிருந்து ஒரு பிரகஸ்பதி. மேலிடத்துப் பார்வையாளர் என்று நீளத் துண்டும், கூப்பிய கைகளுமாக வந்து சேர்ந்து ஏதோ தம்மாலானதைச் செய்துவிட்டு, அல்லது தம் பங்குக்குக் கொஞ்சம் வாங்கிக் கட்டிக்கொண்டு போய்ச் சேர்கிறார் இல்லையா?

கொஞ்சம் பின்னால் திரும்பி யோசித்துப் பாருங்கள். இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலங்களில், டெல்லியில் எப்போது என்ன கலாட்டா வந்தாலும் இங்கே நம் ஊரிலிருந்து காமராஜ் போய்த்தான் தீர்த்துவைத்துவிட்டு வருவார். அரசியல் தீர்க்கதரிசி, ராஜதந்திரி என்பதெல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும். தரணி புகழும் தலைநகரத்தில் வேறு ஓர் ஆசாமி கூடவா கிடையாது?

விஷயம் என்னவென்றால், இந்தியா என்றில்லை. எல்லா தேசங்களிலுமே, எல்லா மாபெரும் கட்சிகளிலுமே இந்த நடைமுறை காலம் காலமாக இருந்து வருகிறது. உள்ளூர்ப் பிரச்னைகளை, உள்ளூர்க்காரர்களைக் கொண்டு தீர்க்க நினைக்காதே. கொஞ்சம் தள்ளி இருப்பவர்களைக் கூப்பிட்டு நாட்டாமை செய்யச் சொன்னால், தீர்ப்பு உருப்படியாக இருக்கும்.

இது அரசியலில் பாலபாடம். திராவிட முன்னேற்றக் கழகத்தில் முரசொலி மாறன் ஆற்றிய பங்கைக்கூட, இத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம். என்னதான் கலைஞரின் மருமகன் என்றாலும், மாறனுக்குக் கடைசி வரை கழகத்தில் ஒரு டெல்லிக்கார இமேஜ்தான் மேலோங்கியிருந்தது என்பதை நினைத்துப் பாருங்கள்! கலைஞரால் தீர்க்க முடியாத தலைவலிகளைக் கூட எத்தனையோ முறை மாறன் வந்து தீர்த்துவைத்திருக்கிறார்; கட்சியில் வேறு யாராலும் கேட்க முடியாத கேள்விகளையெல்லாம், அவர் வந்து கேட்டுப் பல பேரின் அடிவயிற்றில் உப்பு சேர்த்துப் புளி கரைத்திருக்கிறார் என்பதற்கெல்லாம், இது மிக முக்கியமானதொரு காரணம். புவியியல் ரீதியில், கொஞ்சம் விலகியிருக்கும் சொந்தங்களைச் சிக்கல் மிக்க நேரங்களில் அருகே அழைத்து, முக்கியத்துவம் கொடுத்துக் கருத்துக் கேட்டால், வருகிற பதில் உருப்படியாகவும், உள்ளூர் கோஷ்டிகள் ஏற்கும்படியும் இருக்கும்.

பதினெட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த, ஆஸ்திரியப் பிறப்பாளரான மேன்மை தாங்கிய பிரெஞ்சு மகாராணியார் மேரி ஆண்டனி காலத்திலிருந்து நடைமுறையில் இருந்துவரும் வழக்கம் இது.

மகாராணியின் கதை நமக்குத் தேவையில்லை. மகா வில்லன் ஒசாமா பின்லேடன் கொண்டுவந்த ஓர் அவசரச் சட்டத்தைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தோம்.

அல் காயிதாவின் நெட் ஒர்க் மற்றும் செயல்பாடுகளை, வலிமைமிக்கதாகக் கட்டமைக்கும்

முயற்சியில், ஒசாமா மேற்கொண்ட முதல் அதிரடி நடவடிக்கை இதுதான். உலகம் முழுக்க அல் காயிதாவின் ஆட்கள் இருக்கவேண்டும். ஆனால், எந்த முக்கிய ஜோலிக்கும் உள்ளூரிலிருந்து ஆளெடுக்காதே.

யாருக்குமே மறந்திருக்க சாத்தியமில்லாத, செப்டம்பர் 11 தாக்குதல் திட்டத்தையே உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளலாம்.

தாக்குதல் நடந்தது அமெரிக்காவில். திட்டம் தீட்டப்பட்டது, ஆப்கனிஸ்தான் காடுகளில். தாக்குதலுக்கு ஒரு மணிநேரம் முன்புவரை, அல் காயிதாவிலேயே இந்தத் திட்டம் குறித்த முழுத் தகவல்கள் நான்கு பேருக்குத்தான் தெரியும். ஒரு தலை, ஒசாமா பின்லேடன். இரண்டாவது தலை, அல் ஜவாஹிரி. மூன்றாவது, ராணுவத் தளபதி முஹம்மது அடஃப். நான்காவது நபர், காலீத் ஷேக் முஹம்மது என்கிற இத்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர்.

இதில் ரொம்பப் பெரிய ஆச்சர்யம் என்னவென்றால், தொண்ணூறுகளின் தொடக்கத்தில் இருந்தே காலீத் ஷேக் முஹம்மதுவுக்கும் ஒசாமாவுக்கும் நட்பும் நெருக்கமும் இருந்திருக்கிறது. 1993-ல் நடந்த அல் காயிதாவின் முந்தைய அமெரிக்கத் தாக்குதல் சம்பவத்தின்போதே (அதே வர்த்தக மையக் கட்டடம். அடித்தளத்தில் ஆர்.டி.எக்ஸ்.) காலீத், அந்தத் திட்டத்துக்குத் தம்மாலான அத்தனை உதவிகளையும் செய்தவர். சொல்லப்போனால் செப்டம்பர் 11 சம்பவத்துக்கான அடிப்படை யோசனையைத் தெரிவித்து, பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்து வைத்தவரே அவர்தான்.

அப்படிப்பட்ட ஆசாமிக்குக் கூட திட்டத்தைச் செயல்படுத்தத் தேர்ந்தெடுக்கப்பட்ட தினம் 'செப்டம்பர் 11' என்பது, சம்பவ நாளுக்கு ஒரு வாரம், பத்து நாள் முன்னால்தான் தெரியும். அதுவும் எப்படி? அவர் போய் அமெரிக்காவில் உட்கார்ந்துகொண்டு, தீவிரவாதிகளுக்கு நான்கு விமானங்களில் பயணம் செய்ய டிக்கெட்டெல்லாம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்து, அவர்களுக்கு விமானம் ஓட்டப் பயிற்சி அளிப்பதற்கெல்லாம் உதவிகள் செய்து, முன்னதாக சிங்கப்பூர், மலேசியா, பாங்காக் போன்ற இடங்களுக்கு அவர்களை அழைத்துச் சென்று, வேண்டிய பயிற்சிகள் அளித்து, எல்லாம் செய்த நபருக்கே இந்த கதி!

அதுவும் கூட எப்படி? ஒரு பப்ளிக் பூத்திலிருந்து தொலைபேசியில் அழைக்கச் சொல்லி யாரோ ஒரு கோவிந்தசாமியை விட்டு, குறிப்பிட்ட தேதியைச் சங்கேதமாகச் சொல்லச் சொல்லியிருக்கிறார்கள். "பத்தாந்தேதிக்கு ஒருநாள் கழிச்சி ஆட்டுக்குட்டி முட்டை போடுதுங்க" என்று சொல்லியிருப்பார்கள் போலிருக்கிறது.

காலீத் குவைத்காரர். 1983-லிருந்து 86 வரை ஒரு மூன்று வருஷ காலம் அமெரிக்காவில் படித்தவர் என்பதுடன் சரி. செப்டம்பர் 11 திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் அவர்தான் என்கிற விஷயம், அமெரிக்காவிலேயே இருந்த அல் காயிதா ஆட்கள் யாருக்கும் சம்பவம் நடந்து முடியும் வரை தெரியாது.

அவர் விஷயம்தான் இப்படி என்றால், திட்டத்தில் சம்பந்தப்பட்ட பத்தொன்பது அல் காயிதா போராளிகள் விஷயத்திலும் நடந்தது இதுதான். பத்தொன்பது பேரில் ஒருத்தருக்குக் கூட அமெரிக்கா கருப்பாக இருக்குமா, சிவப்பாக இருக்குமா என்று தெரியாது.

எகிப்தில் பிறந்து, ஜெர்மனியில் படித்து வளர்ந்த முஹம்மது அட்டாதான் விமானக் கடத்தல் வைபவத்தின் கமாண்டர். கடத்தல் திட்டத்தில் பெரும்பங்காற்றிய பெரும்பாலான இளைஞர்கள் அத்தனை பேரும் சவூதி அரேபியாவிலிருந்து அனுப்பப்பட்டவர்கள். ஏமனிலிருந்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து, லெபனானிலிருந்து எல்லாம் ஆட்களை ஆப்கனிஸ்தானுக்கு வரவழைத்துப் பயிற்சி கொடுத்தார்கள்.

ராணுவப் பயிற்சி ஆப்கனிஸ்தானில். தடவித் தடவியாவது இங்கிலீஷ் பேசப் பயிற்சி கொடுத்தது, பாகிஸ்தானில். ஒரு விமானம் எப்படி இருக்கும், உள்ளே எந்தப் பகுதி எந்தமாதிரி இருக்கும், பைலட் அமர்ந்திருக்கும் காக்பிட் என்பது எங்கே, எப்படி இருக்கும் என்பதையெல்லாம் தெரிந்துகொள்ள, சுற்றிக்காட்ட அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் பாங்காக்.

இதைவிட காமெடி, மேற்சொன்ன பத்தொன்பது பேருக்கும் அடிப்படை விஷயம் ஒன்று, கடைசி வரை தெரியாது.

அது, தாங்கள் அனைவரும் ஒரே இடத்தில், ஒரே காரியத்தைச் செய்யத்தான் பயிற்றுவிக்கப்படுகிறோம் என்பது!

ஆ... அது முக்கியம். ரகசியக் காப்பு. அல் காயிதாவில் இது இன்னொரு ஆதிப் பாடம். எந்தத் திட்டத்தையும் எப்போதும் எல்லோருக்கும் அவர்கள் உடைத்துச் சொன்னதே கிடையாது. களத்துக்குப் போய்ச் சேரும்வரை தான் எதற்காகப் போகிறோம் என்பதே சம்பந்தப்பட்ட போராளிக்குத் தெரியாது. சினிமாவில் போலீஸ் வரும் காட்சி போல, கட்டக்கடைசியில் எங்கிருந்தோ ஓர் உத்தரவு, காற்றில் வந்து காதில் விழும். 'இதைச் செய்' அவ்வளவுதான்.

செய்து முடிப்பது ஒன்றுதான் அவனுடைய கடமை. யார் உத்தரவிடுகிறார்கள்? எங்கிருந்து அந்த உத்தரவு வருகிறது? தன்னை ஏன் தேர்ந்தெடுத்தார்கள்? சரியாகச் செய்யாவிட்டால் என்ன ஆகும்? செய்துமுடித்தபின் தப்பிப்போமா? செத்துப் போய்விடுவோமா? தெரியாது.

அவன் தப்பித்தாகவேண்டும் என்று மேலிடம் முடிவு செய்தால், தப்பிப்பான். எப்படித் தப்பிப்பான்? யார் வந்து காப்பாற்றுவார்கள்? அது தெரியாது. சொல்லமுடியாது. எப்படியாவது தப்பித்தே தீருவான். யார் வேண்டுமானாலும் வந்து காப்பாற்றுவார்கள்.

காப்பாற்ற அனுப்பப்படுபவனுக்கு அவனை முன்பின் தெரிந்திருக்காது. ஆயிரக்கணக்கான கிலோமீட்டர்கள் தொலைவிலிருந்து அவன் இதற்காகவே வேலை மெனக்கெட்டு வந்திருப்பான். ஆனால் உள்ளூரில் இருக்கும் போராளிகளுக்கு இந்த விஷயமெல்லாம் மறுநாள் தினத்தந்தியில்தான் தெரியவரும்.

இது ஒரு சூட்சுமம். மிகப்பெரிய சூட்சுமம். ஆள்பவர்களைக் குழப்புவதற்காகவும் அடையாளங்களை மறைப்பதற்காகவும் உள்நாட்டுப் போராளிகளின் பாதுகாப்புக்காகவும் மேற்கொள்ளப்படும் ஓர் உத்தி.

அமெரிக்கத் தாக்குதலுக்கு சவூதி அரேபியாவிலிருந்து ஆட்கள் போவார்களென்றால், சவூதி அரேபியாவில் ஒரு காரியத்தை முடிக்க வேண்டுமென்றால், சூடானிலிருந்தும் தான்சானியாவிலிருந்தும் படை வரும். ஆப்கனிஸ்தானை சோவியத்திடமிருந்து காப்பாற்ற, சவூதியிலிருந்து ஒசாமா வந்து இறங்கியதைப் போல!

ஆனால், மிகத் துல்லியமான தகவல் தொடர்பு ஏற்பாடுகள் இல்லாமல் இதெல்லாம் எப்படிச் சாத்தியம்? அதுதான் சொன்னார்களே, சாட்டிலைட் போன், இன்டர்நெட் இத்தியாதிகள் என்று உடனே ஒரு முடிவுக்கு வந்துவிடக் கூடாது.

உண்மையில் 1994-ம் ஆண்டு காலகட்டம் வரை அல் காயிதாவுக்கு இது ஒரு பிரச்னையாகத்தான் இருந்திருக்கிறது. அதுவும் தலைபோகிற பிரச்னை. இன்டர்நெட்டெல்லாம் வந்துவிட்ட காலம்தான் என்றபோதிலும், அல் காயிதா குடித்தனம் நடத்திக்கொண்டிருந்த ஆப்கனிஸ்தான் காடுகளிலும் பாகிஸ்தான் எல்லைப்பிரதேசங்களிலும் புறா காலில் லிகிதம் கட்டியனுப்பும் கலாசாரத்தின் எச்சங்கள்தான் அப்போதும் மிச்சமிருந்தன.

தொண்ணூறுகளின் தொடக்க வருடங்களிலேயே, ஒசாமா பின்லேடனிடம் ஒரு சாட்டிலைட் போன் இருந்தது என்றபோதிலும் ஆப்கன், பாகிஸ்தான், சூடான் போன்ற ஒசாமா தேசங்களில் தொழில்நுட்ப வளர்ச்சி எருமை மாட்டு வேகத்தில்தான் இருந்தது. ஆகவே, அவர்தம் சாட்டிலைட் போனை ஒரு அலங்கார வஸ்துவாக மட்டுமே வைத்துப் பராமரிக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

அவரால் கம்ப்யூட்டர்கள் வாங்க முடியும். இன்டர்நெட் தொடர்புக்கு என்ன செலவானாலும் செய்யமுடியும். தனியே ஒரு கேபிள் லைன் வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளக்கூடிய சக்தி படைத்த ஆசாமிதான். விட்டால், அவரே ஒரு சர்வீஸ் ப்ரொவைடர் ஆகக்கூடியதும் பிரமாதமான காரியமில்லை. ஆனால், அந்த நாடுகளில் அப்போது இன்டர்நெட் என்பது மெட்ராஸ் மழைமாதிரி ஒரு விஷயம்தான். தகவல் தொடர்புச் சேவையில் அரசுகள் மிகவும் பின் தங்கியிருந்த தருணம். தொழில்நுட்பம் என்பது மந்தத்திலும் படுமந்தம்.

ரொம்ப காலம் வரை, ஆட்கள் மூலம் கடிதம் கொடுத்தனுப்பும் புராதன முறையைத்தான் அல் காயிதாவும் கையாண்டிருக்கிறது என்பது, சொன்னால் நம்பமுடியாத விஷயம். ஆனால், அதுதான் உண்மை. இருந்திருந்து சாட்டிலைட் போனில் ஒரு கால் போட்டு யாருக்காவது அஸ்ஸலாமு அலைக்கும் சொல்லலாம் என்றால் கூட, அப்போதைய பாகிஸ்தானின் பேனசிர் புட்டோ அரசு, ஆத்ம சுத்தியுடன் ஒட்டுக்கேட்டுக்கொண்டே இருக்கும்.

சி.ஐ.ஏ., இன்னும் சுத்தம். பழைய நண்பன் என்றெல்லாம் பார்க்காமல், பாகிஸ்தான் எல்லைப்பகுதிகளில் யார், யாருக்கு போன் செய்தாலும் ஒட்டுக்கேட்க தனியே ஒரு ஆபீஸையே திறந்துவைத்துவிட்டு நாலு பேருக்குச் சம்பளம் கொடுத்துக்கொண்டிருந்தது.

ஆயிரத்துத்தொள்ளாயிரத்து தொண்ணூற்று நான்காம் வருடம்தான் ஒசாமா பின்லேடன் முதல் முதலில் இன்டர்நெட் மூலம் தொடர்பு கொள்ள முடிவு செய்து முயற்சிகளை ஆரம்பித்தார். இப்போது உள்ள அளவுக்கு அப்போது இணையம் அத்தனை பிரபலம் இல்லை. ஏதோ சயின்ஸ் ஃபிக்ஷனில் வரும் உடான்ஸ் மேட்டர் என்பது போலத்தான் கிழக்கு உலகம் அதனை நினைத்துக்கொண்டிருந்தது.

அதைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, அல் காயிதாவுக்கென்று தனியே புனைபெயரில் ஒரு வெப்சைட் ஆரம்பித்து, ஒரு மெயில் சர்வர் சௌகரியத்தை ஏற்படுத்திக்கொண்டு தமது ஆட்களுக்கு மின்னஞ்சல் மூலம் தகவல் தெரிவிக்கத் தொடங்கியது அல் காயிதா.

அப்போதெல்லாம் Hacking என்று சொல்லப்படும் – இணைய வேட்டை அத்தனை பரவலாகவில்லை. அடுத்தவரின் இணையத் தளத்தை, மின்னஞ்சலை அத்துமீறி உடைத்துப் பார்த்துத் தகவல் திருடும் கலை வளரவில்லை. ஆகவே, தகவல் பரிமாற்றம் அவர்களுக்கு மிகச் சுலபமாக இருந்தது. தவிரவும் இணையமே சிறுபான்மை பணக்காரர்களின் ஆடம்பர சாதனமாகத்தான் அப்போது பார்க்கப்பட்டது என்பதால், ஆபத்தில்லாமல் செயல்பட முடிந்தது.

ஒவ்வொரு தாக்குதல் நடவடிக்கை தொடர்பான உத்தரவுகளையும் பகுதி பகுதியாகப் பிரித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்புவதே அல் காயிதாவில் வழக்கம். ஒரு ப்ளூ ப்ரிண்ட், ஒருபோதும் ஒரே நபருக்கு முழுமையாகப் போனது என்கிற சரித்திரமே கிடையாது. ஒவ்வொரு பகுதியாகத்தான் போகும். வேறு வேறு நபர்களுக்குத்தான் போகும்.

அல் காயிதாவைப் பொறுத்தவரை ரகசியம் என்பது பாதுகாப்பின் இன்னொரு பெயர். அப்படித்தான் ஒசாமா கருதினார். தொடக்க தினங்களில் இருந்து இன்றுவரை இந்த விஷயத்தில் அல் காயிதா சமரசம் செய்துகொண்டதே இல்லை.

அவர்கள் சமரசம் செய்துகொள்ள விரும்பாத இன்னொரு விஷயம் நிதி ஆதாரம்.